உள்ளான மனிதன்

E-COPY

"நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்." காலத்தியர் 6:9

THE INNER MAN

MONTHLY FREE MAGAZINE – 2015 ISSUE 8

PRODUCED AND PRESENTED BY GRACE TABERNACLE APOSTOLIC CHURCH

FIND E-COPY AT www.gtachurchnet.ca

உள்ளான மனிதன்

உள்ளே.....

எனது அடையாளம் 02

ஜெபம் செய்வோம்.....04

இக்கட்டும் நெருக்கமும் 05


பிரசங்கக் குறிப்புகள் 08

வளர்ச்சி 10

"உள்ளான மனிதன்" மாதாந்த சஞ்சிகையை தபால் மூலம் உங்கள் இல்லங்களுக்கு இலவசமாக பெற விரும்பினால், கீழ்க்காணும் முகவரிக்கு உங்கள் முகவரியை எழுதி அனுப்புங்கள்.

THE INNER MAN – GTAC
7700 MARKHAM ROAD
P. O. BOX 3051
MARKHAM, ON L3S 4T1

GRACE TABERNACLE APOSTOLIC CHURCH – www.gtaCHURCHnet.ca
e-mail: innerman.info@yahoo.com ☎ **416.613.2909**



எனது அடையாளம்

போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

யாரப்பா நீ? என்ற கேள்வியுடன் முதியவர் ஒருவர் மனிதர்களை சந்தித்தார். அவரிடத்தில் அமைதியும் பேச்சில் கெம்பீரமும் இருந்தது. அவர் ஒருவரைப் பார்த்து யாரப்பா நீ என்று கேட்டார். அதற்கு அவர் தான் ஒரு வைத்தியர் என்று சொன்னார். முதியவர் அவரை உற்றுப்பார்த்து, வைத்தியர்கள் அநேகர் இருக்கின்றார்கள், யாரப்பா நீ என்று கேட்டார். அதற்கு அந்த வைத்தியர் தனது பெயரை சொன்னார். அந்த முதியவர் அவரை நோக்கி இந்த பெயரிலும் அநேகர் இருக்கிறார்களே, நீ யாரென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா என்று கேட்டார். அப்போது அந்த வைத்தியர் தான் இன்னாருடைய மகனென்றும், திருமணமாகி தனக்கு மனைவி பிள்ளைகள் உண்டு என்று விபரங்களைச் சொன்னார்.

அப்போது அந்த முதியவர் இது தனித்துவமான உனது அடையாளம். ஆயினும் அந்த அடையாளத்தைக் காத்துக் கொள்ளுகின்றாயா என்று கேட்டார்.

வைத்தியர் அந்த முதியவரை நோக்கி பார்த்தார். முதியவர் தனது கேள்வியை விளக்கிக் கூறினார்.

நீ உனது பெற்றோருக்கு மகனாகவே நடந்து கொள்கின்றாயா? அதற்காக என்ன செய்கின்றாய்?

உன் கடமைகளை உண்மையாய்ச் செய்கிறாயா? அதற்காக என்ன செய்கின்றாய்?

உன் மனைவிக்கு உண்மையான கணவனாய் நடந்து, அன்புகூர்ந்து, உன் கடமைகளைச் செய்கின்றாயா?

உன் பிள்ளைகளுக்கு முன் மாதிரியாய், வழிகாட்டியான தகப்பனாய் இருக்கின்றாயா? அதற்காக என்ன செய்கின்றாய்?

இவை நீ உனது தனித்துவமான அடையாளத்தை காத்து வாழ்கின்றாயா இல்லையா என்பதை உனக்கு விளக்கும் என்றார்.

இந்த கேள்விகள் கணவனுக்கும், மனைவிக்கும், பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும் பொருந்தும். எனது அடையாளத்தை நான் காத்துக் கொள்கின்றேனா? பல பெற்றோர் தமது வாழ்வில் உள்ள தவறுகளை ஒழுங்கு செய்யாது தமது பிள்ளைகள் ஒழுங்காய் நடக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள்.

நண்டு தனது கண்கள் உள்ள பக்கமாய் நடப்பதில்லை. அதன் கண்களுக்கு வலது அல்லது இடது பக்கமாகவே அது நடக்கும். ஒருமுறை தாய் நண்டு தனது குட்டி நண்டைப் பார்த்து, மற்ற

பிராணிகளைப்போல் உனக்கு நேராக நடக்க முடியாதா? கண்களுக்கு நேராய் நட என்று கண்டித்தது. குட்டி நண்டும் முயற்சித்தது ஆனால் முடியவில்லை. தாய் நண்டோ மிகவும் கண்டிப்பாய் நீ நேராய் நடந்துதான் ஆகவேண்டும் என்று கூறிவிட்டது. இடைவிடாத முயற் ச்சிக்குப் பின்பு குட்டி நண்டு களைத்துப் போய் தனது தாய் நண்டைப் பார்த்து நான் முயற்சி பண்ணினேன் என்னால் முடியவில்லை. நீதான் கொஞ்சம் நடந்து காட்டேன் என்று கேட்டது. இப்போது தாய் நண்டுக்கு என்ன சொல்ல முடியும்.

இயேசுக்கிறிஸ்து வெளிப்படுத்தல் விஷேசத்தில் 2:6ல்:

“நான் வெறுக்கிற நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் வெறுக்கிறாய், இது உன்னிடத்திலுண்டு.” என்று எபேசு சபையைக் குறித்து சொன்னார்.

நீ தவறென்று அந்த பழக்கங்களை வெறுக்கிறாய், ஆனாலும் அதை நீ செய்வதற்கும் இடம் கொடுக்கிறாய். “ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளி ருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.” இந்த புது சிருஷ்டியானது “தன்னைச் சிருஷ்டி த்தவருடைய (தேவனுடைய) சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனாகும்”. இது தேவனாலே மனிதனுக்கு கொடுக்கப்பட்ட ஈவாகும். இது எப்படி சாத்தியமாகும்?

தேவன் இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமா யிருக்கிறார். அவர் மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார், ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார். நம்மை அவர் அறிந்திருக்கின்றபடியால் அவர் எமக்கு என்ன உதவி தேவை என்பதை அறிந்திருக்கின்றார். தன்னிடத்தில் வருகிறவனை தான் புறம்பே தள்ளுவதில்லை என்று சொன்ன தேவன் உண்மையுள்ளவராயுள்ளார்.

இன்று உனது தேவை என்ன? இன்று உனது வாழ்க்கை மாற வேண்டும், வேண்டாத பாவ பழக்கங்களிலிருந்து விடுதலை வேண்டும், தேவனின் புது சிருஷ்டியாக, உனது வாழ்க்கை சரியான பாதையில் செல்லவேண்டும் என்று விரும்பினால், பாவங்களை மன்னிக்கும் இயேசுவே என் வாழ்வில் வாரும். என் பாவங்களை மன்னித்து என்னை புது சிருஷ்டியாக்கி உமது பாதையில் நடத்தும் என்று கூறுவாயாக.

“இயேசுவே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்”.

கிருபையின் கூடார அப்போஸ்தல சபை

GRACE TABERNACLE APOSTOLIC CHURCH

www.gtaCHURCHnet.ca ☎ 416.613.2909

ஜெபம் செய்வோம்!

உங்கள் வாழ்க்கையை சர்வ வல்லமையுள்ள பிதவாகிய தேவனிடம் ஒப்படைக்க விரும்பினால், பின்வரும் ஜெபத்தை கருத்தோடு ஏறெடுங்கள்!

பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் அன்பான பிதாவே,

நீர் சர்வ வல்லமையுள்ள தேவன்! உம்முடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவை எங்களுக்காக தந்தருளினதிற்காக உமக்கு நன்றி! இயேசுக்கிறிஸ்துவுக்கூடாக நீர் அனுப்பின தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவருக்காக உமக்கு நன்றி!

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இப்பூமியில் மனிதனாக வந்து, பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து, என்னை மீட்பதற்காக பாடுகள் பட்டு தம்முடைய பரிசுத்தமான இரத்தத்தை சிந்தி, சிலுவையிலே எனக்காக மரித்து, பாவத்தை வென்று உயிர்ந்தெழுந்தார் என முற்றிலும் விசுவாசிக்கின்றேன். இன்று நான் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை என் வாழ்வின் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கின்றேன்! இதுவரைகாலமும் நீர் என்னை நடத்தி வந்த உம்முடைய மிகுந்த இரக்கங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்!

மற்றவர்களை குறித்திருக்கின்ற கசப்பை என் மனத்தில் இருந்து அகற்றிவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன்! பிறர் எனக்கு செய்த குற்றங்களை மன்னித்துவிட இன்று நான் தீர்மானம் எடுக்கின்றேன். பரிசுத்த ஆவியானவரே எனக்குத் துணைசெய்யும்!

என்னுடைய பாவ பழக்கங்களை விட்டுவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன். நான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை மன்னித்தருளும்! இன்னும் நான் உணராமல் செய்துவரும் தீய பழக்கங்கள் என்னில் இருக்குமாயின் அவைகளை எனக்கு வெளிப்படுத்தும். பரிசுத்த ஆவியானவரே இவை யாவற்றிலிருந்தும் விடுதலை பெற்று மனம் பரிசுத்தம் அடைய எனக்கு உதவி செய்யும்!

தேவனே, மோட்ச வாழ்க்கைக்கு அவசியமானதை என் வாழ்க்கையிலே முதலாவதாக நான் தேட என்னை வழி நடத்தும். இன்று நான் என்னுடைய தேவைகளை உம்முடைய பாதத்தில் வைக்கின்றேன், என் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து என்னை பூரணமாக விடுவித்து தேவ சமாதானம் என் உள்ளத்தை ஆள கிருபை செய்தருளும்.

கர்த்தாவே நீர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டு அதற்கு பதில் தருகின்ற ஜீவனுள்ள தேவன் என்று நான் முற்றிலும் விசுவாசிக்கின்றேன்! உம்மை உண்மையாய் தேடுகிற யாவருக்கும் சமீபமாகவுள்ள கர்த்தர் நீர்! பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்வது உமக்கு லேசான காரியம்!
எனக்காக மரித்து உயிர்த்த கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் கேட்கிறேன் நல்ல பிதாவே, ஆமென்!

இக்கட்டும் நெருக்கமும்

இக்கட்டும் நெருக்கமும் வாழ்க்கையில் வராத மனிதர்கள் இல்லை. சிலர் தங்கள் உண்மை நிலையை ஏற்றுக்கொள்வார்கள் ஆனால் வேறு சிலர் துன்பத்தின் மத்தியிலும் எங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாக போகின்றது என கூறிக்கொள்வார்கள்.

நெருக்கங்களும் துன்பங்களும் வாழ்க்கையில் சூழ்ந்து கொள்ளும் போது சில நேரங்களில் எம்மை சுற்றியிருப்போர் எங்களை தேற்று வதற்கு பதிலாக, எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல் கடுமையான வார்த்தைகளை பேசி எம் வேதனையை கூட்டி விடுவா ர்கள். இந்த சூழ்நிலை எங்களை இன்னும் அதிகமாக பாதிக்கலாம். இப்படியான சூழ்நிலைகளை எப்படி எதிர் நோக்குவது?

தாவீது என்னும் தேவ மனுஷனுடைய வாழ்க்கையில் பெரிதான துன்பங்கள் அவரை சூழ்ந்து கொண்டது. அவற்றுள் சிலதை தானாகவே அவர் தேடிக்கொண்டார். எவை எப்படியாக இருந்தாலும் அவர் எப்பொழுதும் தேவனையே அண்டிக் கொண்டார்.

“எனக்கு இரங்கும், தேவனே, எனக்கு இரங்கும்: உம்மை என் ஆத்துமா அண்டிக்கொண்டிருக்கிறது: விக்கினங்கள் கடந்து போகு மட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன். எனக்காக யாவையும் செய்து முடிக்கப் போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன். என்னை விழுங்கப்பார்க்கிறவன் என்னை நிந்திக்கையில், அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, என்னை இரட்சிப்பார்: தேவன் தமது கிருபையையும் தமது சத்தியத்தையும் அனுப்புவார். என் ஆத்துமா சிங்கங்களின் நடுவிலிரு க்கிறது: தீயை இறைக்கிற மனு புத்திரருக்குள்ளே கிடக்கிறேன்: அவர்கள் பற்கள் ஈட்டிகளும் அம்புகளும், அவர்கள் நாவு கருக்கான பட்டயமுமாயிருக்கிறது.

என் கால்களுக்குக் கண்ணியை வைத்திருக்கிறார்கள்: என் ஆத்துமா தொய்ந்துபோயிற்று: எனக்கு முன்பாகக் குழியை வெட்டி, அதின் நடு விலே விழுந்தார்கள். என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, தேவனே என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது: நான் பாடிக் கீர்த்தனம் பண்ணு வேன்” என்று தன் இக்கட்டில் அவர் பாடினார்.

கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தை கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப் படுகிற

தென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பா ருங்கள்: அவைகள் உழைக்கிறதுமில்லை நூற்கிறதுமில்லை. என்றா லும், சாலொமோன் (அரசன்) முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங் களுக்குச் சொல்லுகிறேன். அற்பவிசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவோ?

ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள்.

இவைகளெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்: இவைகளெல் லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்தி ருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும். ஆகையால் நாளைக்காக் கவலைப்படாதிரு ங்கள்: நாளைய தினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படட்டும் அந்தந்த நாளுக்கு அதனதின் பாடுகள் போதும். என்று இயேசு கூறினார்.

எங்களுக்கு இக்கட்டும் நெருக்கமும் வரும்போது, அதற்குரிய காரணத்தை மற்றவர்கள் மேல் திணிக்க எத்தனிக்காமல், சுய அனுதாபத்தைத் தேடாமல், மற்றவர்களின் வசைச் சொல்லிற்கு மறு உத்தரவு கொடுக்காமல் தேவனை நோக்கி பார்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய தேவன் சகலவித ஆறுதலின் தெய்வமாக இருக்கின்றார்.

“நான் சிறியவனும் அசட்டை பண்ணப்பட்டவனுமாயிருக்கிறேன்; ஆனா லும் உமது கட்டளைகளை மறவேன். உம்முடைய நீதி நித்திய நீதி, உம்முடைய வேதம் சத்தியம். இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தது; ஆனாலும் உமது கற்பனைகள் என் மனமகிழ்ச்சி. உம்மு டைய சாட்சிகளின் நீதி என்றைக்கும் நிற்கும்: என்னை உணர்வு ள்ளவனாக்கும், அப்பொழுது நான் பிழைத்திருப்பேன்.” என சங்கீத புஸ்தகத்திலே வாசிக்கிறோம் (சங்கீதம் 119:141-144). எங்களுடைய வாழ்க்கையில் சூழ்நிலைகள் எப்படியாக இருந்தாலும், தேவனுடைய கட்டளைகளை விட்டு வழி விலகிச் செல்லக் கூடாது. இக்கட்டும் நெருக்கமும் வரும்போது தேவ கட்டளைகளை இன்னும் இறுகப்பற்றிக் கொள்ள வேண்டும்.

இயேசு இந்த உலகிலே நன்மை செய்கிறவராக வந்தார். பலர் அவரில் குற்றம் பிடிக்க முயன்றும், அவரில் ஒரு குற்றத்தையும் காணமுடிய

வில்லை. தனக்கு நேரிடப்போகும் மரணத்தை உணர்ந்து, மற்ற வர்களுடன் கசப்பாக அவர் நடந்து கொள்ளவில்லை. பிதாவாகிய தேவனை நோக்கியே எப்போதும் விண்ணப்பம் செய்தார். இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்க கூடுமானால் நீங்கட்டும், ஆனாலும் என் சித்தமல்ல உம் சித்தமே நிறைவேறட்டும் என்று ஜெபித்தார். இயேசுவை பிடித்து உபத்திரப்படுத்தி, நகைக்கும் போது அவர் எதிர் பேசவில்லை. அவர் தான் உலகிற்கு வந்த நோக்கத்தை பிதாவின் சித்தப்படி நிறைவேற்றினார். சிலுவையில் அறையப்பட்டு மரிக்கும் வேளையிலும், இவர்கள் அறியாமல் செய்கின்றார்கள் இவர்களை மன்னியும் என்று சொன்னார். இயேசு எப்பொழுதும் பிதாவாகிய தேவனை நோக்கியே விண்ணப்பம் செய்தார்.

சில வேளைகளில் துக்கங்கள் துயரங்கள் நாங்கள் நன்மை செய்தவர்களாலே எங்களுக்கு வரலாம். தீமை செய்து பாடனுப விப்பதிலும் கூடுமானல் நன்மை செய்து பாடனுபவிப்பதே மேன்மை யானது. இதற்குரிய பலனை தேவன் எங்களுக்குத் தருவார்.

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்க ளையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாய்க் காத்துக் கொள்ளும் (பிலிப்பியர் 4:6-7)

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பாராக!

குடும்பப் பிரச்சனைகள், உளவழுத்தம், தீராத நோய், மதுபானம் மற்றும் சொல்லமுடியாத அடிமைத்தன பழக்கங்கள் உங்களையோ அல்லது உங்கள் உறவினர் நண்பர்களையோ நாளாந்தம் வாட்டுகின்றதா? சமாதானம் இழந்த நிலையில் வாழ்கின்றீர்களா? உங்கள் வீட்டிலோ, மருத்துவ மனையிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ நாங்கள் உங்களுக்காக தனிப்பட இயேசுவின் நாமத்திலே ஜெபிக்கவிரும்பினால், இப்புத்தகத்தில் குறிப்பிட்ட தொலைபேசி இலகத்தில் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

☎ **416.613.2909**

பிரசங்கக் குறிப்புகள்

"பரலோக ஆசீர்வாதங்கள்"

[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]

பிரதான வாசகம்: ரோமர் 8:32

தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?

மனிதர்களுக்கு யாராவது இலவசமாக பொருட்களைக் கொடுப்பார்களாக இருந்தால் மிகவும் மகிழ்ச்சியடைந்து அவர்களை நல்லவர்கள் என கூறுவார்கள். ஆனால் நன்மையானவைகளை பெற்றுக்கொள்ள எங்கள் வாழ்க்கையில் சில ஒழுக்கங்களை கொண்டுவரவேண்டும் என சொல்லும் போது மனிதர்களின் முகநாடி வேறுபடுகின்றது.

தேவன் மனிதனை ஒரு சுயாதீனமுள்ளவனாக சிருஷ்டித்தார். மனிதன் தேவ கட்டளையை மீறி பாவம் செய்த போதும் தேவன் அந்த சுயாதீனத்தில் கைபோடாமல், தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி நாங்கள் பாவத்திலிருந்து விடுதலையாகும் வழியை உண்டுபண்ணினார்.

சொந்த குமாரனை கொடுத்த பரமபிதா மிகுதியான பரலோக ஆசீர்வாதங்களையும் தருவேன் என்று வாக்களித்தவர் அதை நிச்சயமாக எங்களுக்குத் தருவார் ஆனால் இந்த கால இடைவேளைகளில் எங்களைக் குறித்ததான தேவ சித்தம் எங்கள் வாழ்க்கையிலே என்ன பிரகாரமாக நிறைவேறியிருக்கின்றது என ஆராய்ந்துபார்க்க வேண்டும். அந்த பரலோக ஆசீர்வாதங்களை பெற்றவனாக காணப்படுகின்றேனா?

தேவன் தன் சொந்த குமாரனை எனக்கு தந்தார் என்பதை என் வாழ்க்கையிலே உறுதிப்படுத்த முடியுமா? இயேசு தமக்கு சொந்த மானவர்களிடத்திலே (இஸ்ரவேலரிடத்தில்) வந்தார், அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை அதனால் அவர் எங்களிடம் வந்தாரா? இதை தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும்.

எப்பொழுது தேவன் உலகத்திற்கு இரட்சகரை அனுப்புவேன் என்று வாக்களித்தார்? இஸ்ரவேலருடைய வம்சவரலாறு ஆபிரகாமுடன் ஆரம்பமானது. மனிதனை இரட்சிக்க ஒரு மீட்பரை அனுப்புவதாக அவர்

ஏதேனிலே ஆதாம் ஏவாளுக்குச் சொன்னார். எல்லோருக்கும் தகப் பனான ஆதாமிடத்திலே சொன்னார். எல்லோரும் மீட்கப்படவேண்டும் என்பது தேவனுடைய திட்டமாக இருக்கின்றது.

தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையை தள்ளிப்போடாமல் இரட்சகரை இஸ்ரவேலரூடாக அனுப்பினார் ஆனால் அவர்களோ மீட்ப ராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்க மனதில்லாதிருந்தார்கள். இதனால் அநேகர் தேவ ஆசீர்வாதங்களை இழந்து போனார்கள். இன்று என்னு டைய வாழ்க்கையிலே தேவ குமாரனோடு கூட மற்ற ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளும்படியான வாழ்க்கை வாழ்கின்றேனா?

எங்கள் வீட்டிலே பின் கதவு திறக்கப்பட்டிருக்கின்றபோது ஒரு நுளம்பு உள்ளே வருவதைக் கண்டால், சிறிய நுளம்புதானே என்று அலட்சியம் செய்யாமல், உடனடியாக கதவை பூட்டி விடுகின்றோம். எங்கள் வீட்டிற்கு ஒரு விருந்தாளியை எதிர்பார்துக்கொண்டிருந்தால், வீட்டின் அழைப்பு மணி (Calling bell) ஒலித்தவுடனே உடனடியாக சென்று கதவைத் திறக்கின்றோம். இதே போன்று தேவனுடைய வார்த்தை எங்களிடம் வரும் போது, "செய்யாதே" என்னும் காரியத்தை உடன டியாக நிறுத்த வேண்டும், தேவன் "செய்" என்னும் காரியத்தை காலதாமதம் இன்றி செய்ய வேண்டும். இந்த பிரகாரமாக கர்த்தருடைய வார்த்தையை எங்கள் வாழ்க்கையிலே கனம் செய்ய வேண்டும்.

எலியா ஒரு சாதரணமான மனுஷனாக இருந்தும் தேவன் அவனோடு இருந்ததினால் அவன் விசேஷித்தவனாய் மேன்மையான காரியங்களைச் செய்தான், மனிதர்கள் அவனுக்கு முன்பாக பயந்தார்கள். நாங்கள் இன்று அழிக்கப்படாதிருப்பது தேவனுடைய சுத்த கிருபை! தேவன் சுயாதீனமாக எங்களைப் படைத்தார். நாங்கள் எங்களை ஒப்புக்கொடு க்கும் போது அவர் எங்களை பரலோக ஆசீர்வாதங்களினால் நிறைத்து வழிநடத்துவார்!

[இந்த தேவ செய்தியை முழுமையாக கேட்க விரும்பினால், பின்வரும் இணையத் தளத்தில் (**INTERNET** இல்) தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்க முடியும்.]

Pastor Ranjit Constantine

GRACE TABERNACLE APOSTOLIC CHURCH

கிருபையின் கூடார அப்போஸ்தல சபை

☎ **416.613.2909** - **www.gtachurchnet.ca**



வளர்ச்சி

ஆபிரகாம் என்னும் ஒருவன் ஊடாக இஸ்ரவேல் என்னும் ஒரு சந்ததியை தேவன் உருவாக்கினார். இந்த இஸ்ரவேல் சந்ததி 12 கோத்திரங்களை (Tribes) உடையது. இந்தப் பன்னிரண்டு கோத்திரத்தாரும் கானான் தேசத்தை பங்கு போட்டு வாழ்ந்து வந்தார்கள். இன்று மாநிலங்கள் எப்படி அமைக்கப்பட்டுள்ளதோ அதற்கு ஒப்பனையாக அன்று அவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

ஒரு காலகட்டத்திலே பென்யமீன் என்னும் கோத்திரம் இஸ்ரவேல் மத்தியிலே ஒரு அக்கிரமச் செய்கையை செய்தபடியால், மிகுதியாக இருந்த 11 கோத்திரத்தாரும் ஒன்று கூடி, இஸ்ரவேலிலே இப்படிப்பட்ட பொல்லாப்பை விலக்கும்படிக்கு, அந்த முறைகேட்டை செய்த மதியற்ற பொல்லாத மனிதர்களை தங்களிடம் ஒப்படைக்குமாறு பென்யமீன் கோத்திரத்தாரை கேட்டார்கள்.

பென்யமீன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரராகிய தங்கள் சகோதரரின் சொல்லைக் கேட்க மனமில்லாமல், மிகுதியான 11 கோத்திரங்களோடு யுத்தம் பண்ணப் புறப்பட்டார்கள். பென்யமீன் கோத்திரத்தின் படைப்பலம் பட்டயம் உருவுகிற இருபத்தாறாயிரம் பேர் (26,000) என்று தொகையிடப்பட்டது. அதில் இடக்கை வாக்கான 700 பேர், ஒரு மயிரிழையும் தப்பாதபடிக்குக் கவண்கள் எறிவார்கள். மிகுதியான 11 கோத்திரங்களில் பட்டயம் உருவுகிற மனுஷர் நாலு இலட்சம் (400,000) என்று தொகையிடப்பட்டது.

யுத்தத்தின் முதல் இரண்டு நாட்களிலும் 11 கோத்திரத்தாரால், பென்யமீன் கோத்திரத்தை மேற்கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவர்கள் தொகை எண்ணிகையில் சிறியதாக இருந்தாலும், அவர்கள் யாவரும் யுத்தத்திற்கு நன்றாக தேர்ச்சியடைந்தவர்களாக இருந்தார்கள். மூன்றாம் நாளிலே யுத்த தந்திரத்தினூடாக பென்யமீன் கோத்திரத்தை மேற்கொண்டார்கள். (நியாயதிபதிகள் 19-21 அதிகாரங்கள்). அன்றும் இன்றும் படைவீரரின் எண்ணிக்கையை மட்டும் வைத்து ஒரு இராணுவத்தின் பலத்தைக் கணிக்க முடியாது.

ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளவிடுவதற்கு அந்நாடு பொருளாதார (Economically), சமூக (Socially), கலச்சார (culturally), தொழில்நுட்ப (Technology) அடிப்படையில் எவ்வாறாக வளர்ச்சி கண்டுள்ளது என கணிப்பார்கள்.

அபிவிருத்தியை குறித்த தகவல்களை அவை சார்ந்த புத்தகங்களிலும், நம்பத்தகுந்த இணையத் தளத்திலும் மிக விளக்கமாக பெற்றுக்கொள்ளலாம். அபிவிருத்தியை அளவிட பலவிதமான சுட்டிகளை (Indicators) பயன்படுத்துகின்ற போதிலும், சுருக்கமாக பார்க்கப்போனால், பொதுவாக இரண்டு காரணிகளை வைத்து ஒரு நாட்டின் அபிவிருத்தியைக் கணிக்கலாம் என கூறப்படுகின்றது.

1. பொருளாதார வளர்ச்சி (Economical Development) – இது ஒரு நாட்டின் செல்வப் பெருக்கையும், அந்த செல்வம் எப்படியாக நாட்டிற்கு கிடைக்கின்றதென்பதையும் வைத்து கணிக்கப்படுகின்றது.

2. மனித வளர்ச்சி (Human Development) – நாட்டு ஜனங்களுக்கு அந்த செல்வத்தை பெற்றுக் கொள்ள உள்ள வழி முறைகள், வேலை, கல்வி, போஷாக்கு, ஆரோக்கியம், பொழுது போக்கு, பாதுகாப்பு, மற்றும் அரசியல், கலாச்சார சுதந்திரம் போன்றவைகளில் கணிக்கப்படுகின்றது.

நாட்டின் சனத்தொகை அதிகரிப்பை மட்டும் வைத்து அந்த நாட்டின் வளர்ச்சியை கணிக்க முடியாது.

பாடசாலைகளிலே நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள், இந்த எண்ணிகை பாடசாலையின் அளவை தெரிவிக்கின்ற போதிலும் அத்தரவை வைத்து அப் பாடசாலையின் தராத ரத்தை கணிப்பிடமுடியாது. இன்று கனடாவிலே பாடசாலைகளில் தரத்தை அளவிட இருபதிற்கு (20+) மேற்பட்ட சுட்டிகளை பயன்படுத்துகின்றார்கள். பல்கலைக்கழகங்களிலே நவீன தொழில் நுட்பம் அடங்கிய கட்டிடங்கள், நூற்றுக்கணக்கான பேராசிரியர்கள், பல்லாயிரக்கணக்கான மணவர்கள் கற்று வந்தாலும், அந்த பல்கலைக்கழகம், இந்த தரவுகளின் அடிப்படையில் மட்டும் தரப்படுத்தப்படுவதில்லை. மாணவர்களின் தனிப்பட்ட வளாச்சி மிக முக்கிய சுட்டியாக உள்ளது. மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட சராசரி புள்ளியை (GP Average) பெறாதவிடத்து அவர்கள் மேற்கொண்டு அங்கு கல்வி கற்க முடியாது.

குடும்பங்களிலே அங்கத்தவர் தொகை அதிகரிப்பை மட்டும் வைத்து ஒரு குடும்பத்தின் சுபீட்சத்தை அளவிட முடியாது. ஏழ்மையான குடும்பத்திலே அங்கத்தவர் அதிகரிப்பு இன்னும் ஏழ்மை நிலையை அதிகரித்து விடும். பணம் பெருத்த குடும்பங்களிலே, பணம் இருந்தும் பிரச்சனைகள் அதிகரித்துக் கொண்டே போகலாம். இப்படியான பணப்பெருக்கத்தை வைத்து ஒரு குடும்பத்தின் வாழ்க்கைத்தரத்தைக் கணிக்க முடியாது.


உலக போக்கிற்கும், உலக வாழ்க்கையை நிர்ணயிப்பதற்கும் இவ்வாறான பல சுட்டிகளை அளவுப்பிரமாணமாக வைத்து அவற்றிற்கு

முன்னுரிமை கொடுக்கப்பட்டால், அழிவில்லாத நித்திய ராஜ்யத்தை நோக்கி வளர்ந்து வரும் எங்களுக்கு எவ்வளவு மேன்மை இருக்க வேண்டும்!

இன்று ஆலயங்களில் அங்கத்தவர் மத்தியில் பொதுவாக "உங்கள் ஆலயத்தில் எத்தனை பேர்" என்னும் கேள்வியைக் கேட்டுக் கொள்வார்கள். இன்று பல இடங்களிலே வளர்ச்சியை அளவிட, அங்கத்தவர் தொகை, சபை வருமானம், நவீன தொழிநுட்பம் அடங்கிய கட்டிடம், தரமான தளபாடங்கள், சிறந்த இசைக் கருவிகள் போன்றவற்றை மட்டும் பயன்படுத்துகின்றார்கள். இதனை சிலர் எழுப்புதல் என்று கூட சொல்லி விடுவார்கள். இவைகள் எல்லாம் வளர்ச்சியின் சுட்டிகள் என்பதில் எந்தத் தவறுமில்லை, ஆனால் இவைகளின் அடிப்படையில் தனிப்பட்ட, குடும்ப, சமூதாய, சபை சார்ந்த ஆன்மீக வளர்சியை அளவிட முடியாது. ஒவ்வொருவரின் தனிப்பட்ட ஆன்மீக வளர்ச்சி மேற்கூறப்பட்ட சுட்டி களைவிட மிக அவசியமானது! தேவனை அறிந்த நாட் முதற்கொண்டு தேவனை அறிகிற அறிவில் ஒவ்வொருவரும் வளர்ந்து வர வேண்டும்.

அரசாங்கத்தின் அங்கீகாரம் அல்லது பாராட்டு, சமூக தொடர்பு சாதன வலையம் சார்ந்த ஸ்தாபனங்களின் அங்கீகாரம், அறக்கொடை நிறுவனங்களில் (Charity organization) பொருளாதார உதவிகளை பெற்றுக் கொள்ளுதல் போன்றவைகளை ஆலயங்களின் வளர்ச்சியின் உறுதிப்பாடு என சிலர் கருதிக்கொள்கின்றார்கள். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியம் செய்ய வந்தபோது ரோம அரசாங்கத்திடமோ, யூத மதத்தலைவர்களிடமோ இருந்து எந்த அங்கீகாரத்தையும் பெறவில்லை. "இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்" என்று பிதா அவரைக் குறித்து சாட்சி கொடுத்தார். உலக ஸ்தாபனங்களிலிருந்து பாராட்டலோ, மிரட்டலோ எது வந்தாலும், அவை ஒருபக்கம் இருக்க, தேவனால் எங்கள் வாழ்க்கை அங்கீகரிக்க படுதலே முதன்மையானதும் தேவையானதும்.

ஆதாமின் குடும்பத்தில் பிள்ளைகள் இல்லாத போது, தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். (ஆதியாகமம் 1: 28). மனிதன் பலுகிப் பெருகியிருப்பது உண்மை ஆனால் அவைகளை ஆண்டு கொள்கின்றானா என்பது ஐயம்! அவர்கள் நால்வராக, ஒரு சிறிய கும்பமாக இருந்த போது, தமையனின் முகநாடி, தன்னுடைய தம்பியின் நற்கிரியையைக்



கண்டு அவனுக்கு எதிராக வேறுபட்டது. எரிச்சலின் ஆவியினாலே அவன் தன் சகோதரனைப் பகைத்தான். ஒரு சிறு குடும்பமாக இருந்த அவர்கள் வழியாக இன்று ஜனத்தொகை எவ்வளவாக அதிகரித்திருக்கின்றது! பூமியிலே இதுவரைக்கும் எத்தனையோ கோடிக்கணக்கான ஜனங்கள் வாழ்ந்து மரித்திருக்கின்றார்கள். இந்த ஜனத்தொகையை வைத்து மனித குலத்தின் ஆன்மீக வளர்ச்சி பெரிது என்று கூற முடியுமா? அன்று காயீன் தன் சகோதரனுக்கு எதிராக எரிச்சல் அடைந்தது போல இன்றும் அந்த சுபாவம் எம்மத்தியிலும் இருக்கின்றதல்லவா?

மாம்சத்தின் கிரியைகளாகிய விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காம விகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள் களியாட்டுக்கள் முதலானவைகளிலிருந்து முற்றிலும் விடுதலையாகி ஆவியின் கனி யாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் எங்களில் உருவாக வேண்டும்.

ஆவியானவர் சபைகளுக்கு சொல்வதை காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று வெளிப்படுத்தல் புத்தகத்தில் வாசிக்கின்றோம், அதாவது இந்த



கட்டுரையில் சொல்லப்பட்ட காரியத்தை பற்றி அல்ல வேதத்திலே தெளிவாக கூறப்பட்ட ஜீவ வார்த்தைகளை கேட்டு அதன்படி வாழவேண்டும். தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அந்த ஏழு (7) சபைகளை குறித்து எழுதும் போது, அவர்களில் தேவன் விரும்பும் காரியங்களையும், தேவன் வெறுக்கின்ற காரியங்களையும் குறித்து எழுதுகின்றார். அவைகளில் தேவன் விரும்பும் காரியங்களில் கட்டிடமோ, உலக ஐசுவரியமோ, நவீன தொழில் நுட்பங்களையோ, எண்ணிக்கைகளை குறித்ததாகவோ இருக்கவில்லை. மாறாக கர்த்தர் தாமே ஆன்மீக வளர்ச்சியைக் குறித்து சபைகளுக்கு எழுதுகின்றார். உலகரீதியான ஆசீர்வாதங்கள்; தனிப்பட்ட, குடும்ப, சமூதாய, சபை வாழ்க்கையிலும் வரலாம், அந்த ஆசீர்வாதங்கள் மனிதனை தேவனுடன் இன்னும் கிட்டிச் சேரப்பண்ணும் ஆசீர்வாதங்களாக இருக்காவிட்டால் அதனால் எந்த பலனும் இல்லை!

சுவிஷேசத்திற்குரிய பாரமும், ஆயத்தமும் எப்போதும் இருக்க வேண்டும்! ஆனால் ஒரு மனிதனுடைய தனிப்பட்ட ஆன்மீக வளர்ச்சிக்கு மாற்றீடாக எந்த காரியத்தையும் வைக்க முடியாது. மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?

ஒரு பிள்ளை பிறந்த நாள் முதல், கட்டம் கட்டமாக இசைவாய் வளர்ந்து வருகின்றது. தலை முக்கியமானது ஆகவே உடல் பரும னுக்கு ஒவ்வாத வகையில், அளவுக்கு அதிகமாக தலை வளரட்டும் என்று விரும்புகிறவர்கள் யாருண்டு? கால் உறுதியாக இருக்க வேண்டும் ஆகவே பாதங்கள் மிகவும் பெரிதாக இருக்கட்டும் என்று சொல்லலாமா? சரீர வளர்ச்சி இசைவாக இருப்பது போல, எங்கள் ஆன்மீக வளர்ச்சியும் கிறிஸ்துவிற்குள் இசைவாக வளர்ந்து வரவே ண்டும்.

அன்புடன் சத்தியத்தைக் கைகொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனகு பக்திவிருத்தி உண்டாக்கிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்கிறது. (எபேசியர் 4:15, 16)

எங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் நாங்கள் உறுதிப் படுத்திக்கொண்டவர்களாய் தேவன் எங்களை என்ன நோக்கத்திற்காக அழைத்தாரோ, அந்த நோக்கம் எங்களில் நிறைவேற பிரயாசப்பட வேண்டும்.

அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள் கிறேன்: இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மை யும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக் கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் என பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கிறோம் (ரோமர் 12:1-2)

தேசத்தின் நிலைமைகளினாலும், சமுதாய அழுத்தத்தினாலும் இன்று சிலர், மரங்களின் நிழலின் கீழே தேவனை ஆராதிக்கிரார்கள். வேறு சிலர் சவிஷேசத்தின் நிமித்தம் சிறையில் இருந்து தேவனை ஆராதி க்கின்றார்கள், இன்னும் சிலர் டாம்பிகமான ஆலயங்களிலே தேவனை ஆராதிக்கின்றார்கள். எந்த நிலையில் இருந்தாலும், தேவனை ஆவி யோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டும். தேவனே நியாயா திபதி! தேவன் தாமே எங்கள் உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிகிறவராயிருக்கின்றார். வசதிகளுடனோ அல்லது வசதிகள் அற்ற நிலையிலோ இருந்தாலும், எங்கள் உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கப்பட வேண்டும். அப்பயாக புதிதாக்கப்பட்டால், தெய்வீக (திவ்விய) சுபாவம் எங்களிலிருந்து வெளிப்பட வேண்டும்.

அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிய ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். (எபேசியர் 4:22-24)

குறிப்பிடத்தக்க வெளியரங்கமாக வளர்ச்சியை கண்டவர்களைப் பார்த்து, உங்கள் நிலையை அவர்களுடன் ஒப்பிட்டு, தேவன் உங்களுக்கு வைத்திருக்கும் திட்டத்திலிருந்து மனந்தளர்ந்து போகாதிருங்கள். மற்றவர்களின் வெளித் தோற்றங்கள் உங்கள் செயல் முறைகளை மட்டுப்படுத்த இடங்கொடாதிருங்கள். அகங்காரத்துடன் அல்ல, மனத்தாழ்மையும், சாந்தத்துடனும் தேவன் உங்களுக்கு ஒப்புவித்த காரியங்களை நடப்பியுங்கள். தேவன் மற்றவர்களுக்கூடாக நடப்பிக்கும் நற்கிரியைகளை கண்டு எரிச்சலடையாதிருங்கள். அதே நேரத்தில் பிழைப்புக் கடுத்த காரியங்களில் சிக்கிக்கொள்ளாதபடிக்கும், மற்றவர்களுடைய கிரியைக் குறித்து காலத்திற்கு முந்தின நியாயத்தீர்ப்பை வழங்குவதையும் விட்டுவிடுங்கள்.

இதோ சீக்கிரமாய் வருகின்றேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடகூட வருகிறது (வெளிப்படுத்தல் 22:12) என பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம். தேவனே நீதியுள்ள நியாயதிபதி! ஆகவே எங்கள் கண்களை இயேசுவின் மேல் பதிய வைத்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அழைத்த பந்தயப் பொருளின் அழைப்பை நோக்கி பொறுமையோடே ஓடக்கடவோம். பரிசுத்த வேதாகமம் கூறுவதைப்போல "சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவேண்டும். (கொலோசெயர் 1:10)

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்: அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங்கீதம் 1:3)

தனி மனித, குடும்ப வாழ்க்கையிலும், சமூதாய, சபை காரியங்களிலும் ஒரு வேளை குறைகள் இருக்கலாம் அந் நிலையை கண்டு மனம் தளர்ந்து போகாதிருங்கள்! வேதத்தை தினமும் கருத்துடன் வாசியுங்கள், ஊக்கமாக இடைவிடாமல் ஜெபம் செய்யுங்கள் அப்பொழுது தேவ ஆவியானவர் தாமே உங்களை சகல சத்தியத்திலும் வழிநடத்துவார்!



THE INNER MAN WORD PUZZLE

L	L	E	W	G	S	S	M	I	H	U	Y
A	L	V	I	N	B	L	H	O	O	O	A
N	P	I	L	I	R	U	O	Y	U	N	C
D	N	F	W	D	E	H	P	R	D	A	K
E	L	E	A	N	V	S	R	O	D	N	N
R	I	L	T	A	O	Y	O	N	O	T	O
R	L	R	S	T	R	A	I	G	H	T	W
E	W	T	T	S	P	W	E	W	N	P	L
T	Y	O	U	R	H	X	E	N	W	H	E
P	O	N	M	E	U	I	R	U	O	Y	D
A	L	L	A	D	R	S	H	A	H	C	G
H	R	R	K	N	S	H	T	A	P	O	E
C	T	S	E	U	T	H	I	E	N	W	M
N	S	E	S	R	E	V	W	V	T	D	N

TRUST	IN	THE	LORD	WITH
ALL	YOUR	HEART	AND	LEAN
NOT	ON	YOUR	OWN	UNDERSTANDING
IN	ALL	YOUR	WAYS	ACKNOWLEDGE
HIM	AND	HE	WILL	MAKE
YOUR	PATHS	STRAIGHT	PROVERBS	CHAPTER
THREE	VERSES	FIVE	AND	SIX

FREE SUBSCRIPTION!



IF YOU WOULD LIKE TO RECEIVE A FREE COPY OF

THE INNER MAN

MONTHLY MAGAZINE

PLEASE SEND US YOUR MAILING ADDRESS



"உள்ளான மனிதன்"

மாதாந்த சஞ்சிகையை தபால் மூலம் உங்கள் இல்லங்களுக்கு இலவசமாக பெற விரும்பினால், கீழ்க்காணும் முகவரிக்கு உங்கள் முகவரியை எழுதி அனுப்புங்கள்.

THE INNER MAN – GTAC
7700 MARKHAM ROAD,
P. O. BOX 3051
MARKHAM, ON L3S 4T1

www.gtachurchnet.ca ☎ **416.613.2909**

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH